# சைவக்கல்வி வளர்ச்சியில் ஆறுமுகநாவலரின் பங்களிப்பு

இளஞ்சைவப்புலவர். திரு.ஜீ.பால்ராஜ்,
*விரிவுரையாளர்,*
*இந்துநாகரிகத்துறை,*
*கிழக்குப்பல்கலைக்கழகம், இலங்கை.*

***ஆய்வுச்சுருக்கம்***

*இலங்கை வரலாற்றினைப் பொறுத்தவரையில் சைவசமயமும் அதனோடு இணைந்த சைவக்கல்விப் பாரம்பரியமும் தொன்மைவாய்ந்தவையாகும். இவை யாழ்ப்பாணத்தமிழ் மன்னர் காலம்வரை செழிப்பான நிலையில் இருந்து வந்துள்ளதனை வரலாற்று ஆதாரங்கள் உணர்த்திநிற்கின்றன. இவ்வாறு சிறப்பானநிலையில் பேணப்பட்டு வந்தசைவசமயமும், சைவக்கல்விப்பாரம் பரியமும் ஐரோப்பியர்களின் ஆட்சியில் நிலைகுலையத் தொடங்கின. குறிப்பாக இலங்கையில் பிரித்தானியர்களின் ஆட்சியில் சைவசமயத்தவர்களின் பிரதேசங்களில் கிறிஸ்தவசமயமும் ஆங்கிலக்கல்வியுடன் கூடிய கிறிஸ்தவக்கல்வியும் வலிந்து பரப்பப்பட்டன. இதனால் சைவசமயத்தவர்கள் பாரம்பரியமாகபின் பற்றி வந்தசைவக்கல்விப்பாரம் பரியம் வழக்கொழியத் தொடங்கியது. இது சைவசமயத்தினை வெகுவாகப்பாதித்தது. இத்தகைய சூழலில்தான் ஆறுமுகநாவலர் தோற்றம் பெற்றார். தன்னை முழுமையாக சைவசமயத்திற்காக அர்ப்பணித்து, மிகத்தீவிரமாக சமயப்பணிகளையும் பிரசாரப்பணிகளையும் மேற்கொண்டார். இவரது பணிகளால் சைவக்கல்விப்பாரம் பரியம் மீண்டும் புத்துயிர் பெற்று சைவசமயம்மேலோங்கியது. ஆகவே பிரித்தானியர்களின் ஆட்சியில் நிலைகுலைந்திருந்த சைவக்கல்விப்பாரம் பரியத்தினைவளர்ச்சி பெறச்செய்வதற்காக ஆறுமுகநாவலர் ஆற்றியபணிகளை ஆராய்வதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும். இவ்வாய்விற்கு வரலாற்றியல் ஆய்வுஅணுகுமுறையும்(Historical methodology), விபரணஆய்வு அணுகுமுறையும் (Discriptive methodology) உபயோகிக்கப்பட்டுள்ளன.*

***திறவுச்சொற்கள்:*** *சைவசமயம், சைவக்கல்வி, பங்களிப்பு, ஆறுமுகநாவலர்*

## அறிமுகம்

இலங்கையில் சைவசமயமும் அதனோடு இணைந்த சைவக்கல்விப்பாரம் பரியமும் தொன்மை வாய்ந்தவையாகும். தொன்மையான வரலாற்றினைக் கொண்ட சைவக்கல்விப்பாரம் பரியமானது, இலங்கையில் பௌத்தசமயம் பரவிய

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*
© 2024, IRJTSR 

வேளையில் பௌத்தக்கல்வி மரபோடுகலந்து, பிராமணமரபு அல்லது புரோகிதமரபு என அழைக்கப்பட்டு, பேணப்பட்டு வந்தமையை வரலாறுகள் மூலமாக அறியமுடிகிறது. இலங்கையில் ஆட்சி செய்தபல்லவ, சோழ, கலிங்கமாகோன், ஆரியச்சக்கரவர்த்திகள் போன்ற அரசர்களின் காலங்களிலும் சைவக்கல்விப்பாரம் பரியம் செழிப்பான நிலையில் இருந்துவந்துள்ளதனை வரலாற்றுச்சான்றுகள் உணர்த்திநிற்கின்றன.

இவ்வாறு சிறப்பாக பேணப்பட்டு வந்த சைவக்கல்விப்பாரம் பரியமானது, கி.பி.1505 இல்போர்த்துக் கேயரின் வருகையோடு நிலைகுலையத் தொடங்கியது. சமயப்பண்பாட்டினைப்பின் பற்று வதற்கு பெரும் தடையாக இருந்த இவர்கள் தங்களது கிறிஸ்தவசமயத்தைப் பரப்புவதற்காக கல்வியை ஊடகமாகப் பயன் படுத்தினார்கள். இதனால் சைவக்கல்வி வீழ்ச்சி நிலைக்குச்சென்றது. இவர்களைத் தொடர்ந்து ஆட்சி செய்த ஒல்லாந்தர்கள் கிறிஸ்தவசமயத்தைப் பரப்பினாலும் ஓரளவுசமயச் சுதந்திரத்தை வழங்கியிருந்தார்கள். இதனால் அக்காலத்தில் பல சைவ இலக்கியங்கள் எழுந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனால், ஒல்லாந்தருக்கு பிறகு இலங்கையைக்கைப்பற்றி ஆட்சியதிகாரத்தை விஸ்தரித்த பிரித்தானியர்கள் போர்த்துக் கேயர்களைப் போல கடுமையான மதவாதிகளாக செயற்பட்டிருந்தார்கள். இவர்களது ஆட்சியில் இலங்கையில் சமய, சமூக, அரசியல், பொருளாதாரம் எனப்பல மாற்றங்கள் நடந்தேறின. இவற்றுள் சில மாற்றங்கள் நன்மைகளை ஏற்படுத்தினாலும், கிறிஸ்தவ சமயத்தினை வலிந்துபரப்புரை செய்து, சமயரீதியாக இவர்கள் செய்த மாற்றமே சைவசமயம் பல இன்னல் களைச் சந்திக்க காரணமாக அமைந்தது எனலாம்.

கிறிஸ்தவசமயத்தை தமிழர் தம்பிரதேசங்களில் பரப்ப, பிரித்தானியாவில் இருந்து மிஷனறி இயக்கங்கள் வரவழைக்கப்பட்டன. ஆங்கில மொழி அவசியமாக்கப்பட்டது. ஆங்கிலம் கற்றவருக்கே அரச உத்தியோகம் என்ற நிலைக்குள் சுதேசிகள்தள்ளப்பட்டனர். ஆங்கிலம் கற்கவேண்டுமானால் கிறிஸ்தவத்தை தழுவவேண்டும் என்ற நிலை பலரைமதம்மாறச் செய்தது. இந்நிலை சமயத்தினையும் சமயத்தின் வளர்ச்சிக் கருவியாகிய சைவக்கல்வியினையும் பாதிப்படையச் செய்தது.

இந்நிலையிலேதான் வீழ்ச்சியடைந்திருந்த சைவப் பண்பாட்டினை புத்துயிர் பெறச்செய்யும் நோக்கோடு 19ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆறுமுகநாவலர் பலசெயற்பாடுகளை முன்னெடுத்திருந்தார். கல்வி என்பது சமயக்கல்வியே எனும் கொள்கையைக் கொண்டிருந்த ஆறுமுகநாவலர் சைவக்கல்விக்கு உரமூட்டுவதன் மூலமே சைவசமயத்தினை வளர்க்க முடியும் என எண்ணினார். இதனால், சைவக்கல்வியின் வளர்ச்சிக்காக ஆறுமுகநாவலர் பலஅளப்பரிய பணிகளை ஆற்றி, சைவக்கல்வியினை மறுமலர்ச்சியடையச் செய்தார். அவ்வாறு

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்
© 2024, IRJTSR 

சைவக்கல்வியின் வளர்ச்சிக்கு ஆறுமுகநாவலர் செய்தபங்களிப்பினை ஆராய்வதே இவ்வாய்வுக்கட்டுரையின் நோக்கமாகும்.

## ஆறுமுகநாவலரும்சைவக்கல்வி வளர்ச்சியும்

சைவசமயத்தினையும் தமிழ்மொழியினையும் அந்நிய இருள் மேகம் சூழ்ந்திருந்த காலத்தில், இருளை போக்கி ஒளியூட்டும் உதய சூரியனாக, யாழ்ப்பாணம் நல்லூரில் சிவகாமி, கந்தப்பிள்ளை ஆகியோருக்குமகனாக 1822.12.18 இல் பிறந்தார். இவர் பிறந்த காலத்தில் சைவக்கல்வியானது திண்ணைப் பள்ளிகளில் போதிக்கப்பட்டுக் கொண்டிருந்தன. நாவலரும் சைவக்கல்வியை நல்லூர் சுப்பிரமணிய உபாத்தியாயர், வேலாயுதப்பிள்ளை முதலியார், சரவணமுத்து உபாத்தியாயர், சேனாதிராய முதலியார் போன்ற ஆசிரியர்களிடம் கற்றுக் கொண்டார். ஆங்கிலக் கல்வியை 1843 இல் பீற்றர்பார்சிவல் பாதிரியார் நடாத்தியயாழ் வெஸ்லியன் மிஷன் கல்லூரியில் 7 வருடங்களில் (தற்போதைய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி) கற்றுக் கொண்டார்.

அக்கல்லூரியிலே 7 வருடங்கள் தமிழ், ஆங்கில ஆசிரியராக கற்பித்தலையும் மேற்கொண்டார். இதனை, '7 வருடங்கள் கல்விகற்றதனாலும் 7 வருடங்கள் கல்விகற்பித்ததனாலும் 14 வருடகாலம் கிறிஸ்தவசமயச் சூழலையும் கிறிஸ்தவர்கள் தங்கள் சமயத்தைப் பரப்ப, வளர்க்க எடுத்துக் கொண்ட பிரயத்தனங்களையும் நன்கு அறிந்து கொண்டார்' என பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை கூறிச்சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இக்காலப் பகுதியில்வி விலியவேதாகமம் வலிந்து கற்பிக்கப்பட்டது. மிஷனறிகளைத் தாங்கிவந்த பாதிரிமார்கள் கிறிஸ்தவசமயத்தை பரப்புவதிலும், ஆங்கிலமொழி மூலம் கல்வியைவளர்ப்பதிலும், சுதேசிய சமயத்துக்கு எதிராக தீவிரபிரசாரங்களைச் செய்வதிலும் ஈடுபட்டுவந்தார்கள். இதனால், சைவப்பண்பாடு அழிவுப்பாதையை நோக்கிப்பயணித்தது. இச்சந்தர்ப் பத்திலேதான் சைவத்தின் அவலநிலை கண்டு நாவலர்கிளர்ந் தெழுந்தார். எப்படியாயினும் சைவசமயத்தை மேல்நிலைக்கு கொண்டு செல்லசைவக் கல்வியே சிறந்த ஊடகம் என்பதை உணர்ந்தஅவர், 1946ஆம் ஆண் டு சைவசமய மாணவர்களுக்கு இலவசமாக கற்பிக்கத் தொடங்கினார்.

இளையவர்களை தனது வீட்டிற்கு அழைத்து திண்ணைப் பள்ளி மரபில் சைவக்கல்வியை போதித்தார். 'பகலில்மட்டு மன்றி இரவிலும் இவரது கற்பித்தற்பணி தொடர்ந்தது' என்ற பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளையவர்களின் கூற்றில் இது புலப்பட்டு நிற்பதைக் காணலாம். இவ்வாறு சைவக்கல்வியை மீண்டும் புத்துயிர் பெறச்செய்வதற்காக இது போன்ற பல அளப்பரிய பணிகளை ஆறுமுகநாவலர் ஆற்றியிருந்தார்.

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிர்காலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*
© 2024, IRJTSR

சைவப் பாடசாலைகளைநிறுவியமை

திண்ணைப்பள்ளிகள் மூலமாக சுதேசிகள் சைவக்கல்வியை தாய்மொழியில் கற்றுக் கொண்டிருக்க, ஆங்கிலேயர்கள் நிறுவனமயப் படுத்தப்பட்ட பாடசாலை முறையை அறிமுகம் செய்து, ஆங்கில மொழி மூலமாக கல்வியைப் போதித்தார்கள். இதனால் ஆங்கிலக் கல்விமேலோங்கி பாரம்பரியக் கல்வி முறைமறையத் தொடங்கியது. இந்நிலையிலே சைவக்கல்வியை வளர்ப்பதற்கு மரபுவழிக்கல்வியின் தொடர்ச்சியாக, பிரித்தானியரது கல்விச் சிந்தனைகளையும் உள்வாங்கிக் கொண்ட நாவலர் அவற்றினை சைவக்கல்வி வளர்ச்சிக்கு திறம்பட பயன்படுத்தினார்.

இதனால் நிறுவப்பட்டவையே சைவப்பாடசாலைகளாகும். இதனை சைவச்சூழலில் மாணவர்களுக்கு அமைத்துக் கொடுத்தார். அவரது வீட்டின் திண்ணையிலே சைவமாணவர்களுக்கு இலவசமாக கல்வி போதித்துவந்த அவர் அதனை 1848 ஆம் ஆண்டு வண்ணார் பண்ணையில் சைவப்பிரகாச வித்தியாசாலை என்னும் பெயருடன் சைவப்பாடசாலையாக நிறுவினார். இவ்வாறே பிரித்தானியரது நிறுவனமயப் படுத்தப்பட்டபாடசாலைக் கல்விமுறையை சைவமாணவர்களுக்கு அறிமுகம் செய்தார்.

தொடர்ச்சியான இவரது அயராத உழைப்பாலும் இடைவிடாத முயற்சியாலும் யாழ்ப்பாணத்திலுள்ள கொழும்புத்துறை, கந்தர்மடம், பருத்தித்துறை, இணுவில், மாதகல் முதலான இடங்களிலும் வித்தியாசாலைகள் உருவாக்கப்பட்டன. கத்தோலிக்க, புரட்டஸ்தாந்து பாடசாலைகளுக்கு அளிக்கப்படும் அரசு நிதியுதவி சைவசமயத்தினால் நடாத்தப்படும் பாடசாலைகளுக்கும் வழங்கப்பட வேண்டும் என்று ஆங்கிலஅரசோடு நாவலர் போராடினார். இதன் பிரதிபலனாக 1870 இல் சைவப்பிரகாச வித்தியாசாலைக்கு நிதியுதவி கிடைத்தது. இது சைவக்கல்வி வளர்ச்சியில் நாவலர் அடைந்த மிகப்பெரும் வெற்றியாகும்.

பிரித்தானியர்கள் கிறிஸ்தவ சமயத்தைப் பரப்ப ஆங்கிலக் கல்வியை ஒரு பிரதான கருவியாகப் பயன் படுத்தினார்கள். ஆங்கிலக் கல்விகற்பவருக்கே அரச உத்தியோகம், ஆங்கிலம் கற்க வேண்டுமானால் கிறிஸ்தவ சமயத்தைத்தழுவ வேண்டும் என்ற பிரித்தானியரின் அறிவிப்பு சைவசமயத்தவர்களை கிறிஸ்தவசமயத்திற்கு மாறவும், ஆங்கிலக் கல்வியினை கற்கவும் தூண்டியது. ஆங்கில அரசாங்கம் எவ்வளவு தான்சலுகைகள் வழங்கினாலும் அந்த மாயையில் மயங்கி சைவசமயத்தை கைவிட்டு கிறிஸ்தவசமயத்திற்கு மாறிடாத உண்மைச்சைவசமயத்தவர்களும் அக்காலத்தில் வாழ்ந்துள்ளனர். இவர்களின் பிள்ளைகள் ஆங்கிலக் கல்வியைக் கற்பதற்கு ஆங்கிலப் பாடசாலைக்குச் சென்ற போது ஆங்கிலேயர்களால் அவமானப்படுத் தப்பட்டார்கள்.

1871ஆம் ஆண்டில் வண்ணார் பண்ணையில் பாதிரியார்யோன் கில்னர் (Rev.John Kilner) நடாத்திய வெஸ்லியன் ஆங்கிலப் பாடசாலையில் சைவ மாணவர்கள் விபூதியணிந்து சென்றதனால் அவமானப் படுத்தப்பட்டு பாடசாலையிலிருந்து வெளியேற்றப் பட்டார்கள். இந்நிலை கண்டு நாவலர் கிளர்ந்தெழுந்தார். சைவப்பிள்ளைகள் சைவச்சூழலில் ஆங்கிலக்கல்வியினைத் தொடர வேண்டும் எனஉறுதி பூண்டஅவர், 1872ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையில் ஆங்கிலப் பாடசாலை ஒன்றினை நிறுவினார். இதனால் சைவப்பிள்ளைகள் சைவச் சூழலில் ஆங்கிலக் கல்வியை கற்றுக் கொள்ள முடிந்தது.

இலங்கை மட்டு மல்லாது பாரதமும் பிரித்தானியரது ஏகாதிபத்தியத்தின் கீழ் இருந்ததனால், நாவலரது சைவக்கல்விப் பணிகடல் கடந்தும் சென்றது. அங்கும் சைவப்பாடசாலை அமைத்துசைவப் பணிபுரிந்தார். தமிழ்நாட்டில் சிதம்பரத்தில் சைவமாணவர்களுக்காக, சைவப்பிரகாசவித்தியாசாலை ஒன்றினை 1864இல் அமைத்ததோடு, அங்கு ஏறத்தாழ ஆறு ஆண்டுகள் தங்கியிருந்து தமிழையும் சைவத்தையும் பரப்பினார்.

இவ்வாறு சைவக்கல்வி வளர்ச்சிக்காக சைவப்பாடசாலைகளை இலங்கையிலும் கடல்கடந்துv தமிழகத்திலும் அமைத்தனால் 'சைவப்பாடசாலைகளின் ஸ்தாபகத்தந்தை நாவலர்' எனப்போற்றப் பட்டார். இவர் அமைத்த சைவப்பிரகாச வித்தியாசாலைகள் சைவக்கல்வியை மாணவர்களுக்கு நன்றாகவழங்கியது. இதனால் மீண்டும் சைவக்கல்வி புத்துயிர் பெற்றது. இதனால் பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை, காசிவாசி செந்திநாதையர், இணுவில் ஸ்ரீமத்நடராசஜயர், வித்துவான்சி. கணேசஜயர் போன்ற ஆளுமைகள் உருவாக்கப்பட்டனர். அவர்களது மகத்தான சேவைகளையும் இந்து சமூகம் பெற்றுக் கொண்டது. இது போன்ற சைவமாணவப் பரம்பரையினரை உருவாக்கியமை சைவக்கல்வி வளர்ச்சியில் நாவலர் அடைந்தமா பெரும் வெற்றியாகும்

### முறைசாராக்கல்விச்செயற்பாடுகளைமுன்னெடுத்தமை

சைவப்பாடசாலைகளை நிறுவி அவற்றின் வாயிலாகச் சைவ மாணவர்களுக்கு அவர்களின் சூழலிலே அவர்களுக்குப் பொருத்தமான கல்வியை வழங்கியதோடு மட்டுமல்லாமல், பாடசாலைகளுக்கு வெளியிலும் முறைசாராக் கல்விச் செயற்பாடுகள் மூலமாக சைவக் கல்வியை வளர்த்துச் சென்றார்.

- ✓ இளைஞர்களைத் தமது இருப்பிடத்துக்கு வரவழைத்து அவர்களுக்கு கற்பித்தார்.
- ✓ வளர்ந்தவர்கள் கூடியிருக்கும் சபைகளிலே புராண விரிவுரை நிகழ்த்தினார்.
- ✓ கோயில்களிலும் மடாலயங்களிலும் சமயப்பிரசங்கம் செய்தார்.

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*

© 2024, IRJTSR

- ✓ நூற்பயிற்சி நிறைந்த கற்றறிவாளர்கள் மேன்மேலும் தம்மைச் சீர்படுத்திக் கொள்ளவாய்ப்பாக, அரிய பழைய செந்தமிழ் நூல்களை அச்சேற்றி வெளியிட்டார்.
- ✓ பொது மக்களிடையே தவறான கருத்துக்களும் நடத்தைகளும் நிலவினாலும், கிறிஸ்தவர்களினால் பரப்பப்பட்டாலும் அவற்றுக்குப் பரிகாரமாக துண்டுப்பிரசுரங்களை வெளியிட்டார்.

இவற்றில் நாவலரது பிரசங்கப் பணிசைவக் கல்வியை வழங்குவதிலும் வளர்ப்பதிலும் பாரியளவில் பங்காற்றியது. 1847 மார்கழி 31 ஆம் நாள் யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணைச்சிவன் கோயிலில் முதன்முதலாக அவர் நிகழ்த்திய பிரசங்கமே யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் பிரசங்கம் நிகழ்த்தக் காரணமாக அமைந்தது எனலாம். கடவுள் வாழ்த்து, சிவபக்தி, சைவசித்தாந்த உண்மைகள், வேதாகமங்கள், திருவிழா, யாக்கை நிலையாமை, மகளிர் ஒழுக்கம், தருமம், செய்ந்நன்றியறிதல், கொல்லாமை முதலியதலைப்புக்களில் சைவப் பெரியார்களின் வாழ்வினையும் அவர்தம் கருத்துக்களையும் எடுத்துக்காட்டி பிரசங்கம் செய்தார்.

பிரசங்கம் மூலமாகவயது முதிர்ந்தோர் கல்வியையும் நாவலர்வளர்த்துச் சென்றார். நல்லூர்கந்த சுவாமிகோயில், வண்ணார் பண்ணைச் சிவன் கோயில், கைலாசபிள்ளையார் கோயில், அவர்ஸ்தாபித்த சைவப்பிரகாச வித்தியாசாலைகள் முதலிய இடங்களில் புராணவிரிவுரைகளும், சமயப்பிரசங்கங்களும் நிகழ்த்தி முதியோர் மத்தியிலும் சைவசமயக் கல்வியறிவினை ஊட்டினார்.

இலங்கையில் மட்டுமல்லாது கடல்கடந்து தமிழ் நாட்டில் பிரசங்கப் பணியைச் செய்து அங்கும் சைவக்கல்வி வளர்ச்சிக்காகதனது குரலை ஒலிக்கச் செய்தார். தமிழ்நாட்டில் நாவலர் ஆற்றிய பிரசங்கத்தில் கவர்ந்த திருவாவடு துறை ஆதினம் அவரைவியந்து பாராட்டி அவருக்கு 'நாவலர்' பட்டம் வழங்கி கௌரவித்தது.

பிரசங்கம் செய்து கற்றறிந்தவர், கற்றறியாதவர் என அனைவருக்கும் செவிவழியினூடாக கல்வியினையும் சைவ உணர்வினையும் ஊட்டி சைவவாழ்வு வாழச்செய்த தோடு சைவக்கல்வியையும் வளர்த்துச் சென்றார்.

இவ்வாறு பாடசாலைக் கல்விச்செயற்பாடுகளுக்குப் புறம்பாக பல செயற்பாடுகளைச் செய்து சைவக்கல்வியைவளர்த் தெடுத்தார். இவரது செயற்பாடுகளையேதற் காலக்கல்வியியலாளர்கள் முறைசாராக் கல்விஎனக் கூறுகின்றனர். நாவலர் அன்றைய சூழலில் இக்கல்வி முறையினை பயன் படுத்தி சைவக்கல்வியினை வளர்ச்சியடையச் செய்தமை சைவக் கல்வி மீது அவருக்கு இருந்த ஆர்வத்தையும் அபிமானத்தையும் காட்டுகிறது.

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*

© 2024, IRJTSR

பாடவிதானங்களைவகுத்துஅவற்றுக்குரியபாடநூல்களைஎழுதியமை

சமயஆசாரங்களையும் சமயதத்துவங்களையும் உணர்த்தி, சமயஅபிமானத்தையும், பற்றையும் ஊட்டுவதே நாவலரது கல்விக்கொள்கையாக இருந்தது. 'கல்வியிலும் சமயமே அதிகம்' என்பது அவருடைய சிந்தனையாகும். இதற்கிணங்க, சைவப்பாடசாலைகளை அமைத்தநாவலர் அங்கு போதிப்பதற்குரிய பாடத்திட்டங்களையும் தானே வகுத்துக்கொண்ட தோடுமட்டுமல்லாமல், பாடவிதானங்களுக்குரிய சமயநூல்களையும் தமிழ்மொழியில் தானே எழுதினார். ஆங்கில மொழியின் ஆக்கிரமிப்பில் இருந்து தமிழ்மொழியினை மீட்டெடுக்க, நாவலர் சமயக்கல்வி வளர்ச்சிக்குரிய சாதனமாக தமிழ்மொழியினைக் கையாண்டார். தாய் மொழியிற்கற்பிப்பதே சிறந்தது எனக்கருதிய நாவலர், தாய்மொழியிலே ஒவ்வொரு பாடத்திற்கும் நூல்களை எழுதினார்.

பாலபாடம் 1ஆம், 2ஆம், 4ஆம் புத்தகங்கள், சைவவினாவிடை 1ஆம், 2ஆம்புத்தகங்கள், இலக்கணச்சுருக்கம், இலங்கைப்பூமிசாஸ்திரம், சிவாலயதரிசனவிதி, யாழ்ப்பாணச் சமயநிலை முதலிய நூல்களை மாணவர்கள் மட்டுமன்றி அனைவரும் எளிமையாக விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் இலகுவானவசன நடையைக்கையாண்டு எழுதினார்.

அவர் எழுதிய சைவ வினாவிடைகள் சிறுவயதிலிருந்தே மணவர்களுக்கு சமயப்பற்றை ஊட்டிவந்தது. வகுப்பிற்கும், வயதிற்கும் ஏற்றதன்மையில் எழுதிவெளியிடப் பட்டவையே 1ஆம், 2ஆம், 4ஆம் பால பாடங்களாகும். இவற்றில் கடவுள், ஆன்மா, குருலிங்கசங்கமவழிபாடு, தத்துவம் முதலியவற்றை எழுதி சைவ சித்தாந்தம் கூறும் உண்மைகளை சைவ மாணவர்களுக்கு ஊட்டினார். இதனால் சைவ சித்தாந்தக் கல்வி வளர்ச்சியடைந்தது. பயனில்லாத வெறும்வசனங்களை எழுதாது, கல்வியின் நோக்கத்திற்கமைந்த பொருள் பொதிந்தவசனங்களையும் கட்டுரைகளையும் பால பாடங்களில் எழுதியுள்ளார்.

'வித்தியாசாலைகளைத்ஸ்தாபித்து கல்வியறி வொழுக்கங்களிற் சிறந்த ஆசான்களை நியமித்து பிள்ளைகளுக்கு கருவி நூல்களையும்லௌகீக நூல்களையும் சமயநூல்களையும் படிப்பித்தல் வேண்டும். கல்வியிலே மிக்க விருப்பமும் இடையறாமுயற்சியும் உள்ள பிள்ளைகளுள்ளேவறிய பிள்ளைகளுக்கு அன்னமும்வஸ்திரமும், புத்தகமும் கொடுத்தல் வேண்டும். வருடந்தோறும் பரீட்சைசெய்து, சமர்த்தர்களாகிய பிள்ளைகளுக்குப் பரிசு கொடுத்தல் வேண்டும்'. என்று பாலபாடம் 4ஆம் புத்தகத்தில் நாவலர் சைவக்கல்வி பற்றி கூறியிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.


© 2024, IRJTSR

'பிள்ளைகளுக்குப் பாலபாடங்கள், நிகண்டு, திருக்குறள் முதலிய நீதிநூல்கள், சிவபுராணம், இலக்கணம், கணிதம், தருக்கம், வசனநடையிற் செய்யப்பட்ட சைவசமயநூல்கள், பூகோளநூல், வைத்தியசோதிடம், வேளாண்மை நூல், வணிக நூல், அரசநீதி, சிற்பநூல் முதலானவைகளைப் படிப்பிக்க வேண்டும்.' எனப்பாடவிதானம் பற்றி ஆலோசனை கூறினார். பல துறைகளிலும் மாணவர்கள் கல்விபயில வேண்டும் என்பதும் அறிவியல் கல்வியின் அவசியமும் அவரது கூற்றில் நன்குபுலப்படுகிறது.

சைவ மாணவர்கள், வளர்ச்சியடைந்து வரும் உலகிற்கேற்பதங்களை வளப்படுத்திதயார் படுத்திக் கொள்ள வேண்டுமானால், அவர்கள் அறிவியல் கல்வியினைக் கற்றிருத்தல் அவசியம் என்ற நல்லெண்ணத் தோடுவைத்தியம், கணிதம், பூகோளம், சோதிடம், வேளாண்மை, வாணிபம், அரசநீதி முதலிய அறிவியல் சார்ந்தகற்கை நெறிகளையும் பாடவிதானத்தில் சேர்த்துக்கொண்டார். அதனைப் போதிப்பதற்காக இலங்கைபூமி சாத்திரம் போன்ற நூல் களையும் எழுதியுள்ளார்.

சமயத்திலிருந்தே அறிவியல் பிறந்தது என்பதனால், இவை சமயநோக்கில் கற்பிக்கப்பட வேண்டும் என்பதும் நாவலரது கொள்கையாக இருந்தது. சமயக்கல்வியை மையமாகவைத்தே நாவலர் தனது கல்விக் கொள்கைகளை அமைத்தார். கல்வி தொடர்பாக அவர் எழுதிய எழுத்துக்களிலும், ஏனைய செயல்களிலும் சமயக்கல்வியின் பிரதிபலிப்புக்கள் மேலோங்கியிருப் பதைக்காணலாம்.

நாவலரது கல்வித்திட்டத்தில் இளைஞர்களுக்கு கல்விவழங்குவதே முதலிடம் பெற்றிருந்தது. பெரும் புலவர்களெல்லாம் கற்றோர்க்கு நூல் எழுதுவதில் தங்களுடைய காலத்தைக்கழித்துக் கொண்டிருக்க, நாவலர் இளைஞர்களுக்கு சைவக்கல்வியை ஊட்டுவதில் அதிகநாட்டம் கொண்டிருந்தார். சைவத்தையும்தமிழையும்பாதுகாக்கவேண்டுமாயின், இளைஞர்களுக்கு தகுந்த சூழலிலே கல்விபுகட்ட வேண்டு மென்பதை உணர்ந்தார். இதற்காக மாணவர்கள் இலகுவில் உணரக்கூடிய இலக்கண, இலக்கிய, சமயநூல்களை எழுதினார். இவ்வாறு எழுதப்பட்டவைகளே இலக்கண வினாவிடை, இலக்கணச் சுருக்கம், நன்னூல் காண்டிகையுரை போன்றநூல்களாகும். இதனால் இளைஞர்களிடத்தில் தமிழ்மொழியும் சைவக்கல்வியும் நன்கு விருத்தியடைந்தன.

### அச்சியந்திரசாலைநிறுவிவெளியீடுகளைச்செய்தமை

ஆங்கிலேயர்கள் அச்சியந்திரத்தினைப் பயன்படுத்தி கிறிஸ்தவசமயம் சார்ந்தநூல் களையும், துண்டுப் பிரசுரங்களையும் வெளியிட்ட தன்மூலமாக, கிறிஸ்தவசமயத்தையும் கிறிஸ்தவக்கல்வியினையும் பரப்பினார்கள்.

அக்காலத்தில் அச்சியந்திரத்தைப் பயன்படுத்தும் உரிமையை அவர்களே கொண்டிருந்தார்கள். 1835 ஆம் ஆண்டிலே தான் அச்சியந்திரத்தை பயன் படுத்தும் உரிமை சுதேசிகளுக்கு வழங்கப்பட்டது.

இச்சாதகமான சூழ்நிலையைபயன் படுத்திக் கொண்ட நாவலர், நூல்களை எழுதிவெளியிடுவதற்கும் ஏட்டுச்சுவடிகளை நூல்களாகப்பதிப்பித்து வெளியிடுவதற்கும் அச்சியந்திரம் ஒன்றைவாங்கு வதற்கு முடிவு செய்தார். இதனால்தமிழகம்சென்று, 1849ஆம் ஆண்டு அச்சியந்திரம் பெற்று இலங்கை திரும்பிய நாவலர் யாழ்ப்பாணம் வண்ணைவைத்தீஸ்வரன் கோயிலுக்கு அருகாமையில் 'வித்தியானு பாலனயந்திரசாலை' என்னும் பெயருடன் ஒரு அச்சுக் கூடத்தைஸ்தாபித்தார்.

அதன் பின்னர் நாவலர் பெருமான் பாலபாடங்கள், சைவசமய வினாவிடைப் புத்தகங்கள், சிவாலயதரிசன விதி முதலான சமயநூல்களை எழுதிவெளியிட்டதோடு ஆத்திசூடி, வாக்குண்டாம், கோயிற்புராணம் போன்ற பழையநூல்களுக்கு உரைஎழுதியும் வெளியீடுகளைச்செய்தார். அத்துடன்வச்சிரதண்டம், சுப்பிரபோதம், சைவதூஷணபரிகாரம் முதலிய துண்டுப்பிரசுரங்கள் பலவற்றையும் வெளியிட்டார். இதனால் சைவசமயிகள் இவ்விலக்கியங்களைக் கற்றுக்கொண்டு சைவசமயத்தின் உண்மை, தொன்மை நிலைகளை அறியலாயினர். இதனால் சைவக் கல்வி நன்கு வளர்ச்சியடைந்தது.

## முடிவுரை

பிரித்தானியர்களது ஆட்சியில் கிறிஸ்தவ சமயமும் கிறிஸ்தவக்கல்வியும் வலிந்துபரப்பப்பட்டதனால், சைவப் பண்பாடும் அதனோடு இணைந்த சைவக்கல்வியும் பாரியளவில்வீழ்ச்சியடைந்திருந்தது. இவ்வாறு வீழ்ச்சிப்பாதையில் பயணித்துக் கொண்டிருந்த சைவசமயத்தினையும் சைவக்கல்வியினையும் வளர்ச்சியடையச் செய்யும் நோக்குடன் ஆறுமுகநாவலர் அல்லும் பகலுமாய் அயராது உழைத்தார். இதன் பிரதிபலனாய் சைவசமயமும் சைவக்கல்வியும் நன்குவளர்ச்சியடைந்தன.

பெரியஆளணி, பலமான பொருளாதாரம், சிறந்ததிட்டமிடல்கள் போன்றவற்றின் மூலம் அனேகமான நாடுகளைக்கைப் பற்றிவைத்திருந்த ஒருபெரும் அரசுடன் தனியான ஒரு ஆளுமையாக நின்று சைவத்தையும், தமிழையும் பாதுகாக்கவும் வளர்ச்சியடையச் செய்யவும் போராடிய ஆறுமுகநாவலரை சமயத்தின் தலைவர் என்பதனை விடசமயத்தின் தளபதி என்றுகுறிப்பிடுவது இவ்விடத்தில் சாலப் பொருந்தும்.

இலங்கையில் இன்றும் சைவசமயம், சைவக்கல்வி, தமிழ்மொழி என்பன சிறப்பான நிலையில் உள்ளது என்றால் அதற்கு ஆங்கிலேயர் ஆட்சியில் ஆறுமுகநாவலர்

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*

© 2024, IRJTSR

முன்னெடுத்த அளப்பரிய சேவைகளே காரணமாகும். இதனையே பேராசிரியர் சி.வைதாமோ தரம்பிள்ளை,

“நல்லைநகர் ஆறுமுகநாவலர் பிறந்திலரேற்

சொல்லு தமிழெங்கேசுருதியெங்கே- எல்லவரும்..”

எனப்பாடிச் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

முத்தமிழ் வித்தகர்சுவாமி விபுலாநந்தர் கூறுகையில், 'ஶ்ரீலஶ்ரீஆறு முகநாவலர் அவர்களுடைய முன்மாதிரியைப்பின் பற்றிச் சைவசமயமும், சைவக்கல்வியும் நிலை பேறடைய வேண்டு மென்னும் ஒருநோக்கத்தோடு நைஸ்திகப்பிரமசாரிகள் பத்துப்பேர் முன்வருவார்களாயின் இந்நாடு நலமடையும் சைவக்கல்வி வளர்ந்தோங்கும், சைவசமயம் விருத்தியடையும்' என்கிறார்.

பல மகான்களும் போற்றும் அளவிற்கு ஆறுமுகநாவலர் தனது சமயத் தொண்டுகளினால் வரலாற்றிலே நீங்காத இடத்தை பெற்றுள்ளார். சைவக் கல்விப்பாரம் பரியத்துடன் இன்றும் கல்விபோதிக் கப்படுவதற்கு வழிகோலியவர் ஆறுமுகநாவலர். யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, கொழும்பு முதலான இடங்களில் இந்துக்கல்லூரி என்ற பெயருடன் சைவப்பாடசாலைகள் சைவச்சூழலில் அமையப் பெற்றுள்ளமை ஆறுமுகநாவலரின் சைவக்கல்விவளர்ச்சியின் பிரதிபலிப்புக்களாகும். சைவக் கல்வி வளர்ச்சிக்கு இவர் செய்த பங்களிப்பினால் இலங்கையில் இன்று வரையும் சைவக் கல்வியானது செழிப்பான நிலையிலே உள்ளது. எனவே ஆறுமுகநாவலர் மறைந்தாலும் அவரது சமயப்பணிகள் அவரை உயிர்ப்பித்துக் கொண்டே இருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

## உசாத்துணைநூல்கள்

1. அறிவுடைநம்பி .ம.சா., (2012), 'சுவடிப்பதிப்புமுன்னோடிகள்', உலகத்தமிழராய்ச்சி நிறுவனம், சென்னை.

2. கந்தசத்தியதாசன். செ.,(2010), 'சைவக்கல்விப்பாரம் பரியமும் சைவப்புலவர்களின் பங்களிப்பும்', பி.வி.ஆர்.ஆஃப்செட், சென்னை.

3. பாக்கியம்.பொன்., (1970), 'நாவலர்சரித்திர ஆராய்ச்சி', வட்டுக்கோட்டைத் தமிழ்ச்சங்கம், சுழிபுரம்.

4. சீவரத்தினம். சீ., (1962), நாவலர்சமயப்பணி', நாவலர் வித்தியாசாலை, யாழ்ப்பாணம்.

5. சைவசமயம், (1978), விவேகானந்தசபைவெளியீடு.

6. குமாரவடிவேல்.இ., (2003), 'நாவலர்கல்விமரபும் இன்றையதேவையும்', சைவசித்தாந்த மன்றம், கனடா.



© 2024, IRJTSR 

## சஞ்சிகைகள்

1.செல்வரஞ்சிதம் சிவசுப்பிரமணியம்., (2012), 'ஆறுமுகநாவலர் அவர்களின் பன்முகப்பணிகள்', சங்கத்தமிழ், கொழும்புத் தமிழ்ச்சங்கம், கொழும்பு.

2. முருகையன்.இ.,(1979), 'கல்வியியல்நோக்கில்நாவலர்', நாவலர்நூற்றாண்டுமலர், ஸ்ரீலஸ்ரீஆறுமுகநாவலர்சபை.